

தருமபுரி கலை கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் கலந்து கொண்டு 533 பயனாளிகளுக்கு ரூ. 2 கோடியே 9 இலட்சத்து 43 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட ஆட்சியர் சாந்தி,தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜி.கே.மணி, வெங்கடேஸ்வரன்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கிழக்கு மாவட்ட செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் மாவட்ட கழக செயலாளர் பி.என்.பி.இன்பசேகரன்,நகர் மன்ற தலைவர் லட்சுமி மாது,மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா,மற்றும் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டனர்.

### துணை முதல்வராகப் பொறுப்பேற்று முதன் முறையாக

# சேலம் வருகை தரும் உதயநிதி ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

## கழகத்தினருக்கு - மாவட்ட் செயலாளர்கள் - அமைச்சர் இரா.இராஜேந்திரன் - டி.எம்.செல்வகணபதி - எஸ்.ஆர்.சிவலிங்கம் வேண்டுகோள்!







சேலம், அக். 19 -

சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன், மேற்கு மாவட்டச் செயலாளர் டி.எம். செல்வகணபதி எம்.பி., கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர், உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (19.10.2024 - சனிக்கிழமை) பிற்பகலில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட பிறகு மாலை 4.00 மணியளவில் தலைவாசல் டோல்கேட் வந்தடைகிறார்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துணை முதலமைச்சராக பொறுப்பேற்று முதன்முதலாக சேலம் மாவட்டம் வருகை தருகிறார்.

சேலம் வருகை தரும் இளம் தலைவருக்கு தலைவாசல் டோல்கேட் அருகே சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய மாவட்டங்களின் சார்பாக பிரம்மாண்டமான வரவேற்பளிக்கப்படுகிறது. மூன்று மாவட்டங்களில் இருந்தும் மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர கழக நிர்வாகிகள், நகர கழக, ஒன்றிய கழக, பகுதி கழக, பேரூர் கழக, சேலம் மாநகர வட்டக் கழக, கழக, வார்டு கழக, ஊராட்சிகளின் கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, மகளிர் தொண்டர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, வர்த்தக அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மீனவர் அணி, நெசவாளர் அணி, அயலக அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, சுற்றுச்சூழல் அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி என அனைவரும் “படை பெருத்ததால் பார் சிறுத்ததோ” என மாற்றாரும் வியக்கும் வண்ணம் அலை கடலென ஆர்ப்பரித்து, நம் இளம் தலைவர் துணை முதலமைச்சர் அவர்களை வரவேற்க திரண்டு வந்திட வேண்டும்.

அதே வேளையில் வரவேற்பு குறித்த பேனர்கள், பட்டாசு, பொன்னாடைகள், பூங்கொத்துகளை அருள் கூர்ந்து அவசியம் தவிர்த்திட வேண்டும்.

புத்தகங்கள், கைத்தறி ஆடைகளை மட்டும் வழங்கி வரவேற்க வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### இன்று நடைபெறுகிறது!

# கரூரில் - மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் வி.செந்தில்பாலாஜி வேண்டுகோள்!



கரூர், அக்.19 -

கரூரில் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் இன்று நடைபெறுகிறது. வேலை நாடுவோர் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக்கொண்டு பயன்பெறுமாறு அமைச்சர் வி. செந்தில் பாலாஜி அழைப்பு விடுத்துள்ளார்.

மின்சாரம், மதுவிலக்கு ஆயத்தீர்வைகள் துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ., விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க தமிழ்நாடு அரசு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையம், தமிழ்நாடு மாநில ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் இன்று (19 ம்தேதி - சனிக்கிழமை) கரூர் தாந்தோணிமலை அரசு கலைக் கல்லூரியில் காலை 8:00 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறுகிறது.

வேலை நாடுவோர் இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி வேலை வாய்ப்பு பெறுமாறு அழைக்கிறோம்.

இந்த தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் உற்பத்தித் துறை ஜவுளித் துறை இன்ஜினியரிங் கட்டுமானம். ஐ.டி துறை, ஆட்டோமொபைல்ஸ், விற்பனைத்துறை, மருத்துவம் சார்ந்த துறைகள் உள்ளிட்ட 200 க்கும் மேற்பட்ட முன்னணி தனியார் நிறுவனங்கள் தங்கள் நிறுவனத்திற்காக 10,000க்கும் மேற்பட்ட காலி பணி இடங்களுக்கு ஆட்களை தேர்வு செய்ய உள்ளனர்.

இந்த முகாமில் எட்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு, பட்டப்படிப்பு, முதுகலை படிப்பு தொழிற் கல்வி பயின்றவர்கள் செவிலியர்கள் பொறியியல் மாணவர்கள் அனைத்துப் பிரிவினரும் கலந்து கொள்ளலாம். இம்முகாமில் கலந்துகொள்ள வயது வரம்பு இல்லை. மேலும் அனுமதி முற்றிலும் இலவசம்.‘

இம் முகாமிற்கு வருகை புரியும் அனைத்து வேலை வாய்ப்பற்ற இளைஞர்களும் தங்களது சுய விபரம் (Biodata) மற்றும் கல்விச் சான்றுகளின் நகல்களுடன் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. இம்முகாமில் தேர்வு செய்யப்படும் தேர்வர்களுக்கு பணி நியமன ஆணை உடனுக்குடன் வழங்கப்படும்.

இம்முகாமில் பணி நியமனம் பெறுபவர்களின் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு ரத்து செய்யப்படமாட்டாது. வேலைநாடும் மனுதாரர்கள் (www.tnprivatejobs.tn.gov.in) இணையத்தில் candidate login ல் விவரங்களை பதிவு செய்தல் வேண்டும். மேலும் விவரங்களுக்கு மனுதாரர்கள் 93452 61136 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

இம்முகாமில் கலந்து கொள்ள விரும்பும் தனியார் துறை நிறுவணங்கள் www.tnprivatejobs.tn.gov.in இணையதளத்தில் பதிவு செய்து அவ்விணைய தளத்தின் வாயிலாக இவ்வேலை வாய்ப்பு முகாமிற்கு விண்ணபிக்க வேண்டும். மேலும் விபரங்களுக்கு வேலையளிப்போர் ( Employer) 9499055912, 93605 57145 என்ற எண்ணை தொடர்பு கொள்ளவும் இம்மாபெரும் வேலை வாய்ப்பு முகாமில் வேலை தேடும் இளைஞர்கள் அதிக அளவில் கலந்து கொண்டு வேலைவாய்ப்பு பெற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் வி. செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார்.

### கள்ளக்குறிச்சிக்கு வருகை தரும்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## கழக நிர்வாகிகளுக்கு மாவட்டச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. வேண்டுகோள்



கள்ளக்குறிச்சி, அக். 19 -

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சி பணிகள் குறித்து ஆய்வு செய்வதற்காக தமிழக துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழகத்தின் துணை முதல்அமைச்சராக பொறுப்பேற்ற பின் முதன் முறையாக இன்று அக்டோபர் 19 (சனிக்கிழமை) கள்ளக்குறிச்சிக்கு வருகை தருகிறார்,இதன் பின்னர் அவர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் ஆய்வுக்கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் எ.வ.வேலு, மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த் ஆகியோர் முன்னிலையில் மாவட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சி பணிகள் குறித்து அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொள்ள உள்ளார், அதனைத் தொடர்ந்து தெற்கு மாவட்ட கழக இளைஞரணி சார்பில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை திறந்து வைக்க உள்ளார், எனவே கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட எல்லையான மணலூர்பேட்டை, மாடாம்பூண்டி கூட்டு ரோடு,தியாகதுருகம், கள்ளக்குறிச்சி டோல்கேட் மற்றும் 4 முனை சந்திப்பு ஆகிய இடங்களில் அமைச்சர் எ.வ.வேலு முன்னிலையில், எனது தலைமையில் தமிழகத்தின் துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மிகச் சிறப்பான முறையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்படுகிறது, எனவே கழக நிர்வாகிகள் மட்டுமின்றி பொதுமக்களும் கட்சி பாகுபாடு இன்றி பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி வரும் திராவிட மாடல் அரசின் நல்ல ஆட்சிக்கு ஆதரவு அளிக்கின்ற வகையில் பொதுமக்களும் பெருந்திரளாக கலந்து கொண்டு துணை முதல் அமைச்சருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்,

வரவேற்பு ஏற்பாடுகளை அந்தந்த பகுதியை சேர்ந்த கழக நிர்வாகிகள் கட்சியின் அனைத்து நிலையில்உள்ளநிர்வாகிகளுடன் இணைந்து சிறப்பான முறையில் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு உள்ளார்,இவ்வாறு அறிக்கையில் அவர் கூறியுள்ளார்.





நீலகிரி மாவட்டம், உதகை தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில், வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் குறித்து அரசுத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் (17.10.2024) நடைபெற்றது. உடன் அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், ஆவின் மேலாண்மை இயக்குநர்/ மாவட்ட கண்காணிப்பு அலுவலர் சு.வினித், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி.என்.எஸ்.நிஷா, உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், மாவட்ட வன அலுவலர்சு. கௌதம், மாவட்ட வருவாய் அலுவலர் மா.நாராயணன், மாவட்ட ஊராட்சித்தலைவர் மு.பொன்தோஸ் உட்பட பலர் உள்ளனர்.



நாகை மாவட்டம் நாகை ஒன்றியம் அக்கரைப்பேட்டை மீன் இறங்கு தளம் விரிவாக்கப் பணிகளை பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில்மகேஷ்பொய்யாமொழி பார்வையிட்டார். உடன் நாகை மாவட்டச் செயலாளர் என்.கௌதமன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.இராஜேந்திரன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் இரா.மனோகரன் மற்றும் பலர் உள்ளனர்.

### வடகிழக்குப் பருவமழை முன்னேற்பாடுகள்

# நீலகிரி மாவட்டத்தில் மிகச்சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது!

## மாவட்ட ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தகவல்!

உதகை, அக்.18-

நீலகிரி மாவட்டம், உதகை அரசு தமிழகம் விருந்தினர் மாளிகையில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் அவர்கள் தலைமையில், அரசு தலைமைக் கொறடா கா.ராமச் சந்திரன், ஆவின் மேலாண்மை இயக்குநர் ஃ மாவட்ட கண்காணிப்பு அலுவலர் வினீத், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் முன்னிலையில், வடகிழக்குப் பருவமழை முன்னேற்பாடு பணிகள் தொடர்பான அரசுத் துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் நேற்று (17.10.2024) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தெரிவித்ததாவது:

வடகிழக்கு பருவமழையை பொறுத்தவரை நீலகிரி மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகம் சார்பில் முன்கூட்டியே பல்வேறு முன்னெச்ச ரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வந்தால் அதனை எதிர்கொள்ளும் வகையில் அனைத்துத்துறை அலுவலர்களும் தயார் நிலையில் இருக்க வேண்டும். குறிப்பாக மழை பெய்யும் போதும், காற்றின் காரணமாகவும் மின்சாரம் தடைப்பட அதிக வாய்ப்புள்ளது. எனவே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் முன்கூட்டியே தேவையான மின் கம்பங்கள், அதற்குரிய உபகரணங்கள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

அதேபோல், நீலகிரி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையையொட்டி, அதிக பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகளை அலுவலர்கள் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். பாதிப்புகள் ஏதேனும் ஏற்பட்டால் உடனடியாக பொதுமக்களை அருகிலுள்ள நிவாரண முகாம்களில் தங்க வைத்து, அவர்களுக்கு தேவையான உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தர வேண்டும்.

மேலும், மழைக்காலங்களில் பொதுமக்களுக்கு தடையின்றி உணவுப் பொருட்கள் கிடைக்கும் வகையில் 1 மாத காலத்திற்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை இருப்பில் வைத்திருக்க வேண்டும். மாவட்டத்தில் நடைபெற்று வரும் சாலைப் பணிகளை விரைவாக மேற் கொண்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

நீலகிரி மாவட்டம், மழை மாவட்டமாக உள்ளதால், மழைக்காலங்களில் மண்சரிவு ஏற்படாத வகையில் தேசிய நெடுஞ்சாலை மற்றும் மாநில நெடுஞ்சாலைத் துறை களின் சார்பில் மண் ஆணி பொருத்தும் பணி உள்ளிட்ட புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்தி தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இருப்பினும் சில இடங்களில் மண்சரிவு உள்ளிட்ட இயற்கை இடர்பாடுகள் ஏற்பட்டால், உடனடியாக அதனை சீர்செய்து, போக்குவரத்து பாதிக்காதவாறு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், பருவமழை காலத்தில் அனைத்துத் துறை அலுவலர்களும் விழிப்புடன் இருந்து சிறப்பாக பணியாற்ற வேண்டும் என தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததார்.

செய்தித்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படியும், துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், ஒவ்வொரு மாவட்டத்திலும் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அந்தந்த மாவட்ட நிர்வாகம் சார்பில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் நீலகிரி மாவட்டத்தில் மாவட்ட நிர்வா கத்தின் சார்பில், வடகிழக்கு பருவமழையை அனைத்துமுன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. பேரிடர் பொது மக்களுக்கு எவ்வித இடையூறு ஏற்படாத வகையில் துறை அலுவலர்கள் பணிகளை மேற்கொள்ள அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தை பொறுத்தவரை 283 அபாயகரமான பகுதிகள் உள்ளது. இதனை தொடர்ந்து கண்காணிக்க 42 மண்டல குழு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதேபோல் பேரிடர் காலத்தில் பொது மக்களை பாதுகாப்பாக தங்க வைக்க ஏதுவாக 456 நிவாரண முகாம்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இயற்கை இடர்பாடுகள் ஏதேனும் ஏற்பட்டால் 1077 என்ற இலவச தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு, தகவல் அளிக்கும் பட்சத்தில் உடனடியாக, அலுவலர்கள் விரைந்து பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும், வடகிழக்கு பருவமழையையொட்டி, மாவட்ட நிர்வா கத்தின் சார்பில் அனைத்துமுன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மிகச் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளதால், பொதுமக்கள் எந்தவொரு அச்சமும் அடைய வேண்டாம் என தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர். கணேஷ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என். எஸ்.நிஷா, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், மாவட்ட வன அலுவலர் கௌதம் (நீலகிரி கோட்டம்), மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், மாவட்ட ஊராட்சித்தலைவர் பொன்தோஸ், குன்னூர் சார் ஆட்சியர் செல்வி சங்கீதா, வருவாய் கோட்டாட்சியர்கள் செந்தில்குமார் (கூடலூர்), சதீஷ் (உதகை), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.தனப்பிரியா, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.கீதாஞ்சலி, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் (கட்டிடம் (ம) பராமரிப்பு) ரமேஷ், நகராட்சி ஆணையாளர்கள் ஜஹாங்கீர் பாஷா (உதகை), திருமதி.சசிகலா (குன்னூர்), முனியப்பன் (நெல்லியாளம் (ம) கூடலூர் (பொ)), மாவட்ட வழங்கல் அலுவலர் ரவிச்சந்திரன், உதகை வட்டார போக்குவரத்து அலுவலர் தியாகராஜன், இணை இயக்குநர்கள் (மருத்துவ நலப்பணிகள்) (பொ) மரு.நாகபுஷ்பராணி, திருமதி.ஷிபிலா மேரி (தோட்டக்கலைத்துறை), துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) (பொ) மரு. வெங்கட்ரமணன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் தயாளன், சமூக பாதுகாப்புத்திட்ட தனித் துணை ஆட்சியர் திருமதி. கல்பனா, வேளாண் பொறியியல்துறை செயற்பொறியாளர் ராதாகிருஷ்ணன், கால்நடை பராமப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.சத்தியநாராயணன்,

’தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாகப்பொறியாளர் செல்வகுமார், உதவி இயக்குநர்கள் முகமத் ரிஸ்வான் (பேரூராட்சிகள்), சரவணகுமார் (ஊராட்சிகள்), ஆவின் பொது மேலாளர் ஜெயராமன், பேரூராட்சிகளின் செயற்பொறியாளர் ராஜா, நகரமன்றத்தலைவர்கள் திருமதி.வாணீஸ்வரி (உதகை), திருமதி.சிவகாமி (கூடலூர்), திருமதி.பரிமளா (நெல்லியாளம்), துணைத்தலைவர்கள் ரவிக்குமார் (உதகை), வசீம் ராஜா (குன்னூர்), ஊராட்சி ஒன்றியத்தலைவர்கள் மாயன் (எ) மாதன் (உதகை), ராம்குமார் (கோத்தகிரி), திருமதி.கீர்த்தனா (கூடலூர்), பேரூராட்சித்தலைவர்கள் செல்வி வள்ளி (தேவர்சோலை), சித்ரா தேவி (ஓவேலி), திட்டக்குழு உறுப்பினர்கள் ராமசாமி, திருமதி.விசாலாட்சி, அனைத்து வட்டாட்சியர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் தெற்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 35வது வார்டு வாலிபாளையம் பகுதி, ஸ்ரீ சக்தி திரையரங்கம் அருகில் கனமழையின் காரணமாக சாலையில் ஏற்பட்ட திடீர் பள்ளத்தில் விழுந்த நபரை உடனடியாக மீட்டு மேல் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பியதுடன், மழையின் காரணமாக பாதிக்கப்பட்ட சாலையை திருப்பூர் வடக்கு மாவட்டச் செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இதில் தெற்கு மாநகரச் செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், துணைச் செயலாளர், மாமன்ற உறுப்பினர் பி.ஆர்.செந்தில்குமார், பகுதி செயலாளர் மு.க.உசேன், வட்டக் கழக செயலாளர் ஆட்டோ பி.தங்கராஜ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் த.சசிகுமார், மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் த.சந்துரு, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ம.சூர்யா உள்பட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.